**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: MC.25/2023**
**RW : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தர்மராஜ்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **தமிழரசன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்)
**(14.08.2026)**
**முதல் விசாரணை தொடர்ச்சி**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

திருமணத்திற்கு பின் மனுதாரருக்கு நான் வாங்கி கொடுத்த மோதிரத்திற்கான பில் நகல் எ.ம.சா.ஆ.6 ஆகவும் (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை ஆட்சேபினை எழுப்பியதால் ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது). திருமணம் நடைபெற்ற திருச்சி ரயில்வே சொசைட்டி கல்யாண மண்டபத்திற்கு பணம் செலுத்தியதற்கான ரசீது நகல் எ.ம.சா.ஆ. 7 ஆகவும் (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபினை எழுப்பியதால் ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது). மனுதாரருக்கு நான் வாங்கி கொடுத்த ஐ.போன் மொபைலுக்கான எனது வங்கி பரிவர்த்தனை காட்டக்கூடிய நகல் எ.ம.சா.ஆ. 8 ஆகவும் (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபினை எழுப்பியதால் ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது). திருமணத்திற்கு என்னுடைய இலாக்காவில் இருந்து திருமண கடன் வழங்கியதற்கான இன்வாய்ஸ் கடித நகல் எ.ம.சா.ஆ. 9 ஆகவும் (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபினை எழுப்பியதால் ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது).

எனது தாயார் மனுதாரர் பெற்றோர் மீது மதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை குற்ற எண். 24/2023 க்கான ஜெராக்ஸ் எ.ம.சா.ஆ.10 ஆகவும் (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபினை எழுப்பியதால் ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது), மதுரை கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் CC.1429/2024வழக்கில் மனுதாரர் அளித்த சாட்சியத்தின் நகல் எ.ம.சா.ஆ.11 ஆகவும், அதே நீதிமன்றத்தில் மனுதாரரின் தந்தை தனபாண்டியன் என்பவர் அளித்த சாட்சியத்தின் நகல் எ.ம,சா.ஆ.12 ஆகவும் , நான் எனது திருமணத்திற்காக எனது நண்பர் கார்த்தியிடம் கடன் வாங்கியதற்கான கடன் ஆவணம் நகல் எ.ம.சா.ஆ.13 ஆகவும் (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபினை எழுப்பியதால் ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது) குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரர் மனு தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**.

நிருபண வாக்குமூலத்திற்கு விபரம் சொன்னது யார் என்றால் நான் தான். அதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியா என்றால் சரிதான். நானும் மனுதாரரும் பிரான்மல்லை கள்ளர் இனத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். எங்களுக்கு குலதெய்வ கோவில் கருமாத்தூரில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் குலதெய்வ கோவில் ஒச்சாண்டம்மாள் என்றால் சரிதான். அதேகோவிலில் மற்ற குலதெய்வங்களும் உள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கும் மனுதாரரின் தகப்பனாருக்கும் அதே கோவில் வளாகத்தில் குலதெய்வ கோவில் உள்ளது என்றால் சரிதான். எங்களது திருமணத்தை பேசி முடித்தது இருவீட்டு பெரியவர்கள் என்றால் சரிதான். மனுதாரரின் தந்தையாரின் கோவில் பூசாரி முத்துக்கண்ணன் என்பவர் என்றால் சரிதான். அவர் மூலமாக தான் மனுதாரரை அறிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவர் தான் எங்களது திருமணத்தை பேசி முடித்தார் என்றால் சரிதான். திருமணம் பேசும் போது நான் நேரடியாக இருந்து பேசவில்லை என்றால் இருந்தேன். பொதுவாக பிரான்மல்லை கள்ளர் திருமணத்தில் மணமகள் வீட்டார் மணமகளுக்கும் மணமகனுக்கும் தங்க நகைகள், சீர்பாத்திரங்கள் வீட்டு உபயோபொருட்கள் கொடுத்து தான் திருமணம் செய்வார்கள் என்றால்

சரிதான. திருமணத்தின் போது மனுதாரர் வீட்டில் எனக்கு தங்க செயின் போட்டார் என்றால் சரிதான். எவ்வளவு என்று தெரியாது. தங்க மோதிரம் போட்டார்கள். கை செயின் போட்டார்களா என்றால் சரிதான். இவை அனைத்தும்சேர்த்து 7–1/2 முதல் 8 பவுன் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. அதுபோல் மணமகளுக்கும் அவரது பெற்றோர் வலையல், செயின், ஒட்டியானம், தோடு, எல்லாம் அணிவித்தார்கள் என்றால் சரிதான். அதனுடைய மதிப்பு சுமார் 94 பவுன் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் திருமணத்திற்கு முன்பாக பேசும் போது நான் அவ்விடத்தில் இல்லாத காரணத்தினால் தான் மேற்படி விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. பூசாரி முத்துக்கண்ணன், எனது பெற்றோரை விசாரித்தால் இதுபற்றி தெரியவரும் என்றால் சரிதான்.

நான் திருமணத்தின் போதும் தற்போதும் தென்னக ரயில்வேயில் டி.டி.ஆர்.இயாக வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் 2017ம் வருடம் முதல் வேலை செய்து வருகிறேன். நான் திருமணத்தின் போது ஆந்திரமாநிலம் குண்ணூரில் டி.டி.ஆர்.இயாக வேலை பார்த்தேன். எனது அடிப்படை சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.38,000/–. எனக்கு எவ்வித பிடித்தமும் இல்லாமல் மாதம் சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.62,000/–ஆகும். மனுதாரர் தற்போது வேலை எதுவும் பார்க்கவில்லை என்றால் அவரதுஅப்பா டியூசன் எடுப்பதாக சொன்னார். எப்போது சொன்னார் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு சொன்னார். டியூசன் எவ்வித சம்பளமும் இன்றி எடுக்கலாம் என்றால் சரியல்ல. எவ்வளவு பணம் பெறுகிறார், எத்தனை பேருக்கு எடுக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் தற்போது அவரது பெற்றோர் வீட்டில் தான் குடியிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் 23.02.2023ம் தேதி மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டில் இறக்கிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். திருச்சியில் நானும் எனது பெற்றோரும் ஒரே வீட்டில் தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். மனுதாரர் தனியாக வீடு எடுத்து குடியிருந்தால் மாதம் 8,000 முதல் 10,000/– வாடகையாக கொடுக்க வேண்டும் என்றால் சரிதான்.

அதேபோல் மற்ற உணவு, உடை , மருத்துவ செலவு மற்றும் அத்தியாவசிய செலவு எண்ணும் வகைக்கு மாதம் ரூ.25,000/— ஆகும் என்றால் சரிதான். எனக்கு ஒவ்வொரு வருடமும் இன்கிரிமண்ட் கூடும் என்றால் சரிதான்.

திருமண பத்திரிக்கை அடித்தது யார் என்றால் நாங்களும் அவர்களும் அடித்தோம். எங்கள் ஜாதி வழக்கப்படி திருமண பத்திரிக்கையில் இருவீட்டாரின் குடும்பத்தின் பெயரை போடுவது வழக்கம். எனது திருமணம் திருச்சியில் நடைபெற்றது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாட்ஸ்அப் மூலமாக அனுப்பப்பட்ட மனுதாரரின் பெற்றோர் பெயர் இல்லாத பத்திரிக்கை என்றால் சரிதான். அதை நாங்கள் தான் அடித்தோம். **அந்த பத்திரிக்கை நகல் 65பி சான்றுடன் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது). திருமணத்தின் போது திருமண செலவிற்காக மனுதாரரின் பெற்றோர் வீட்டில் ரூ.10லட்சம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதை பூசாரி முத்துக்கண்ணன் மூலமாக எனது தாயார் மனுதாரர் பெற்றோரிடம் குறிப்பாக கேட்டார் என்றால் சரியல்ல. எனது தரப்புசாட்சியாக எனது தாயாரை மேற்கண்ட விபரங்களை நிருபிக்க விசாரணை செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் கேட்ட 10 லட்சம் ரூபாய் அப்போது தராததால் மனுதாரரின் பெற்றோர் பெயரை விடுத்து திருமண பத்திரிக்கை அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 01.06.2022ம் தேதி மனுதாரரின் பெற்றோர்கள் திருமங்கலம் மாசி மஹாலில் திருமண நிச்சயதார்த்தத்தை விமர்சியாக நடத்தினார்கள் என்றால் சரிதான். அந்த நிச்சயதார்த்தத்திற்கு ரூ .5 லட்சம் செலவழித்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களது திருமணத்திற்கு மனுதாரரின் பெற்றோர் பெயரை போட்டு 2வதாக பத்திரிக்கை அடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் அது அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. திருமண நிச்சயதார்த்ததிற்கு பின்பு திருமணம் முடியும் வரை நான் மனுதாரருடன் வாட்ஸ்அப்பில் சேர் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அழைபேசி நம்பர் 9360513799 என்றால் சரிதான்.

திருமண நாளன்று மனுதாரருக்கு கிடைத்த மொய் பணம் ரூ.5 லட்சத்தை திருமண செலவுக்காக எதிர்மனுதாரரின் பெற்றோர்களிடம்

மனுதாரர் பெற்றோர்கள் வழங்கினார்கள் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு மேலும் ரூ.5 லட்சம் கேட்டு நானும் எனது பெற்றோரும் கொடுமைப்படுத்தினோம் என்றால் சரியல்ல. மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு அணிவித்த தங்க அணிகலன்களை எனது தாயார் அவரிடம் கொடுக்க வற்புறுத்தினார் என்றால் சரியல்ல. ஜனவரி 2023ம் வருடம் மனுதாரருக்கு போட்ட 94 பவுன் நகையை எனது தாயார் வற்புறுத்தி பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. மனுதாரர் தன்னுடைய வாழ்க்கை நலன் கருதி அனைத்து நகைகளையும் எனது தாயாரிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் எனதுதாயாரை பற்றி மனுதாரர் உருவ கேளி செய்ததாக சொல்லியிருப்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அம்மா சொல்லி தான் அந்த சம்பவம் பற்றி சொல்கிறேன் என்றால் சரிதான். 18.02.2023ம் தேதி நாங்கள் அனைவரும் எங்கள் குலதெய்வ கோவிலுக்கு வந்தோம் என்றால் சரிதான். அங்கு வைத்து மனுதாரர் எங்களிடம் தவறாக நடந்து கொண்டது சம்பந்தாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 23.02.2023ம் தேதி மீதமுள்ள 5 லட்சத்தை கேட்டு உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தொந்தரவு செய்தோம் என்றால் சரியல்ல. அன்றைய சமயத்தில் மனுதாரரின் விருப்பத்திற்கு எதிராக நான் தான் அவரை கூட்டிக் கொண்டு அவரது வீட்டிற்கு கொண்டு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. வருமானம் இல்லாத மனைவியை பராமரிக்க சட்டப்படி கணவருக்கு உள்ளது என்றால் சரிதான். எனது மனைவியை பராமரிக்க எனக்கு சட்டப்படி கடமையுள்ளது என்றால் சரிதான். நான் எனது மனைவியை அவரது வீட்டில் விட்டு சென்ற நாள் முதல் எவ்வித பராமரிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது திருமணத்தின் போது மனுதாரரிடம் கார் கேட்டு வேண்டுகோள் விடுத்தோம் என்றால் சரியல்ல. எனக்கு மனுதாரர் வீட்டில் இருந்து புல்லட் வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் மதிப்பு ரூ.1 லட்சம் இருக்கும் என்றால் சரிதான்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.